இன்னமுஞ்சோதித்திடன்முறையன்றென்றிரங்கியோ ரிலங்கிழைபாகன், றன்னதுவழக்கப்படியெதிர்வந்தான்றாழ்ந் துதம்மனக்குறைமுடித்துஞ், சொன்னவக்கணமேகயிலையின ருகிற்றுலங்குகோபுரமென்றொன்றமைத்துப், பன்னலங்களு மீந்தாங்குநாடோறும்பரிவில்வாழ்ந்துறும்படிபணித்தான். ()

அவ்வுலகுயர்ச்சியாகமமுதனூலனந்தமுமளவறவறையு, மிவ்வழிபுகழ்சீர்ப்பசுக்களினுரோமமியாவையு மிலிங்கமேயெ ன்று, லெவ்வுணர்வுடையாரெனினுமம்மகிமையிசைத்திடவ ல்லராகுவரோ, வெளவுமுத்தியினுமவைபுரந்திடலேமாட்சி யென்பவருணர்வாரே. (௩க)

முசுத்தலைப்புனிதனளனிராகவனோர்முறைமைசான்ம ன்னர்தம்முயிர்போற், பசுக்குலம்புரப்பாரவைதொழுமாதை ப்பதிவளரழகியநாதர், கொசுத்திரள்புரையும்வானவர்விருப் பாற்குலவுதம்மனைவியைவெறுத்துப், பொசுக்குதீப்புரைசொ ற்சொற்றிகழ்ந்தணைந்தபுதுமையையினிப்புகன்றிடுவாம். ()

முற்றிற்று.

ஆக படலம் அ-க்கு கவி உ௱௩௰௧.

உ

சிவமயம்.

அம்பிகை பூசித்தபடலம்.

கயிலைமீதுகொலுவிருந்தகண்ணுதற்பிரானொர்நாள்
வெயிலினிற்புழுப்புரைந்துவெம்பொர்தொண்டனுய்யுமா
றயிலுறழ்ந்தகண்ணிதன்னொடல்விடைப்புறத்திவர்ந்
தொயில்குலாவுபவனியொப்பவும்பர்வாயுகைத்தனன். (க)

செல்லும்வேலையாங்கொர்திண்சிலம்படுத்தசாரல்வா
யல்லுலாம்பில்சோலைதன்னிலக்கணம்பிறந்ததோர்
நல்லுருக்குழந்தைகூவிநாவறந்ததைத்தெரிந்
தொல்லுமங்கையேகொணுதெனுவமர்த்தியோதுவாள். (உ)

இக்குழந்தைபெற்றதாரவ்வேழையெங்ககன்றுளா
ளக்குணத்திதுய்யுநன்கியம்புகென்றிறைஞ்சினள்
மிக்குறுங்குரூரகாமவெவ்வரக்கியேயொர்காப்
புக்குளாணமாழிமால்புரக்குமென்றதட்டினன். (௩)

அந்தமாலெனண்ணனாவனியாளுமாவனாதலா
லிந்தமைந்தனைப்புரந்தலாதினைப்புலேனென்றாள்
வந்தநாளைத்திறனுமற்றொர்தன்மையாலுநற்
பந்தமாம்பணாறெணண்டதாகிடச்செய்தானரோ. (ச)

அங்கிசைந்தமட்டில்விட்டிடாமலவ்வரக்கன்வல்
லங்கிசந்துமைந்தர்முற்றவாழ்வராகநல்கென்றா
ளோங்கியன்றவர்க்குமீடிவிகலதாகியிமையவர்த்
தோங்கிசஞ்செய்பண்டதென்றுசொல்லியுந்தடுத்தனன். (ரு)

கேட்டதைத்தவிர்ந்திலாள்கிளத்துமாறுமீந்தனன்
பூட்டகத்ததானபூர்வபுண்ணியங்கொலோவரன்
வேட்டமோகவாரியோமன்வெற்பணங்கின்மெய்யருட்
டேட்டமோவிமூன்றுமோசெயத்தகாதசெய்தவே. (சு)

அன்பனைக்குறித்தவாறவன்கருத்தினசைபோ
லின்பமுற்றநல்கிவெள்ளிவெற்பிடத்திலேகினார்
பின்படர்ந்ததானவப்பிணக்கரால்வினைகொலாந்
துன்பவாரிமத்தியிற்சுழன்றிரங்கினாரரோ. (எ)

கொண்டல்வண்ணனாதியோர்குழாமிகக்குழைந்ததாற்
றுண்டரீகவசுரனைத்தொலைத்திடற்கிசைந்தநாள்
வண்டலம்புகொன்றையானமாதுபாற்பயத்தனீந்
தொண்டகைக்கணங்கியாற்றனைத்தகந்தனைச்செய்தான். ( )

அதனையோர்ந்தவுமைசினங்கொடமரமாதருக்கெலா
மதலைநல்குதன்மையின்றியாகும்வண்சொல்கூறினன்
முதனிகழ்ந்தவம்புமன்றுமொழியும்வண்டுமுன்னலால்
விதனமிக்குமைக்குநேர்விடைப்பிரான்விளம்புவான். (௯)

இருவிதத்தும்வானவர்க்கிடுக்கணல்கியனையோர்
பெருமையெய்துமாறுசெய்தபிழையுனைப்பிணித்ததென்
னருகிருக்கொணாதுபோயருந்தவஞ்செய்துய்யென்றான்
மருமலர்க்குழற்பிராட்டிவாடிநொந்திறைஞ்சியே. (௰)

எங்குபோயெமாதவஞ்செய்தென்றுணேணங்குவேன்
பங்குபெற்றவென்னையிட்டடிச்சினத்தணீதியோ
பொங்குகங்கையோடுவாழ்திபோவலென்றுபொருமினள்
கங்குலன்னகண்டனங்கொர்கருணைவந்துகழறுவான். (௧௧)

நந்தியும்பசுக்களியாவுநம்மைநம்பியன்பினாற்
சிந்தியாநலம்பொருந்தமாதையம்பதிக்கணின்
புந்தியாலியன்றவாறுபூசைசெய்திருத்தியாம்
வந்திவண்குலாயவாறுவாழ்துமென்றியம்பினன். (௧௨)

ஆதலான்மடந்தைமாருளன்னவட்புணர்ந்துதன்
காதலாளன்மேனியிற்கலந்துளாருமின்மையிற்
பேதமற்றபேதமானபெற்றியுற்றுவாழினும்
போதவஞ்சுதன்மையும்புரந்திருக்கைநன்மையே. (௧௩)

வேறு.

அந்தமொழிகேட்டுமையாளான்முன்னடியாடன்மே
லிந்தமட்டுங்கருணையிருந்ததோவென்றேங்கிச்
சொந்தமிழந்துபிறர்போற்றொழுதுவிடைபெற்றப்பாற்
றந்தமகாதியருந்தாதியருஞ்சூழ்ந்தருக. (கச)

தெற்குநோக்கிவிரைவிற்சிலநாணடந்துசிறந்தோர்
கற்குந்தமிழ்மாமுனிவன்கருணைமலிதேயுந்தி
லெற்குமுரிமைநல்குமெழிலாமாதுரர்நடுவி
னிற்குமிலிங்கந்தன்னைநேரிற்கண்டுதொழுதாள். (கரு)

வெள்ளைவிடைமேலான்பான்மேவிநொடியில்விண்வாய்
கொள்ளைநெடுந்தூரம்போங்கோலாகலப்பார்ப்பதியாள்
பிள்ளையனப்போனடந்துபெரிதுவருந்தல்கருதா
தெள்ளைநிகர்வாழ்வினருமிறுமாப்புறவுநென்னே. (கசு)

அம்மையுறப்பெண்ணுங்கையணிபூணினத்தைக்குணத்தை
செம்மைநிலையைச்சூழ்வார்செயலைக்காலங்களைப்பொய்ச் [ச்-
சும்மைப்பொலிவாறம்பெருக்கிச்சொல்லத்துணிகின்றிலனென்
றெம்மையிகழ்சில்புலவீரிவைசொற்றநூல்பலவே. (கஎ)

சொல்லும்பொருளுமலவாச்சுவையுமுணவுமெனவே
யல்லும்பகலுஞ்சிவனோடிணைந்தங்கிருந்தாளகன்று
நெல்லுங்கரும்பும்வயலினிலவுந்திருவாமாத்தூ
பொல்லுந்தினமேகயிலையுறங்கிப்பொலிவற்றதுவே. (கஅ)

வந்தானைமலரும்புனலுமல்லியாதனமாதியவுந,
தந்தாதரித்தவ்விலிங்கந்தனையேதுணையாநம்பிச்,
சிந்தாகுலமற்றுருக்கள்செபித்தாளிருநாலுகமுன்,
னந்தாமுதற்சில்பசுக்கணலநோய்ந்ததுமோர்ந்தவளால். ( )

பட்டுபுகமென்பனநம்மினத்தார்தமக்கேநெடுநாள்,
கட்டுகுழலாற்கற்பங்கடத்துமுமைக்கோர்கணமாச்,
சுட்டுநலுமாகாதேதுயர்கூர்ந்திடன்மினுலகீர்
விட்டுமறுகுஞ்சிவன்றன்விடைமீதவண்முன்மிளிர்ந்தான். ( )

கண்டுதொழுதாளவனுங்கரத்தாலெடுத்துத்தழுவிப்
பண்டுபுரையவருகிற்பரிவோடிருக்கட்டணித்தான்
விண்டுமுதலோர்துயர்போய்மேனுண்மகிழ்ச்சியடைந்தார்
மண்டுகயிலைத்தடமுமாதையிடம்போன்றதுவே. (௨௧)

அங்குமிங்குமொருவாறவிர்தல்வியனன்றுலகிற்
றங்குமோராயிரத்தெண்டலமுமன்றித்தன்மே
னங்குபகர்வார்மனத்தினடுவாழ்பலதெய்வமுமா
யெங்குமிருக்குமபிராமேசன்புகழ்மிக்கினிதே. (௨௨)

வல்லார்புகழுமாதைவளமாநகர்க்கோயிலுக்கு
ளெல்லாக்கடவுளரும்போற்றிலிங்கத்திடைவாழெம்மான்
வில்லாற்பிரம்பாலிருவர்மேனுளடிக்கப்படுமாண்
பில்லாவிட்டாலென்போலிளைஞர்பரமோர்வரிதே. (௨௩)

கங்கைச்சடையார்தம்மைக்கயிலைக்கிரியிற்பிரிந்த
நங்கைக்குலசேகரமாநாராயணிமாதையிற்போய்ச்
செங்கைத்துணராற்பூசைசெய்துய்ந்தமைசற்றிசைத்தா
மங்கைக்கடமாமுனிவோரருள்பெற்றமையீண்டறைவாம். ()

முற்றிற்று.

ஆக படலம்-௩க்கு கவி ௨௱௩௰௩.

உ

சிவமயம்.

முனிவர்பூசித்தபடலம்.

சாலோகமுதலாயகதிநாலுமடியார்தமக்கீங்கெழிற்
பூலோகநகராயவாமாதைநடுநின்றபுனிதப்பிரான்
கோலோகமதுசெய்தளித்திட்டதுடனுயகுலமாண்மிய
மேலோகமுதலெந்தவுலகூடுநிறைவாகிமிளிர்வுற்றவால். (௧)

நிறைவாயவாசாரநெறிசென்றகுலசீலநினைவெய்தியே
குறைவாயமதவாதர்பின்சென்றுவாடாதகுணமன்னிமுன்

ணிறையோன்வகுத்துள்ளவிருபத்தெட்டாகமத்திற்சொன்மேன்
முறையேநமக்காயதுணையென்றுமுயல்கின்றமுனிவோர்களும்.

ஒன்றன்றிமற்றொன்றுமின்றின்றெனத்தேறுமாமன்னலாற்
நொன்றன்றிவாழார்தமகமேமனென்னக்குலாவுற்றெலாங்
கன்றன்றிவேறன்றெனக்கொள்ளுஞானக்கடற்றோய்ந்தருட்
குன்றன்றியெருதுகோலம்பெருக்குங்குலந்தரும். (௫)

வேதாகமங்கூறுநெறியொன்றெனக்கொண்டுமெய்பொய்யெனும்
பேதாதிபேதப்பிணக்குற்றுவாடாப்பெருந்தன்மைவாய்ந்
தாதாரமோராறுமப்பாலுமெய்யென்றறிந்தார்முனுஞ்
சாதாரணத்தோரெனத்தோற்றுபொதுவாயதகவோர்களும்.

மற்றும்பல்வகைப்பட்டதவர்தாமுமொருகோடிமட்டாகியே
சுற்றும்புனறபம்பைநதியென்பாலைச்சுயம்பீசனைப்
பற்றுங்கருத்தோடுநனிபூசைசெய்தார்கள்பலநாளருட்
பெற்றும்பொருளொன்னவேதெர்ண்டுமுய்த்தார்பெரும்பாலுமே.

அவ்வூரினருகாகவொருகோடியெனுமொட்டணியாவயஞ்
செவ்வூழின்வழிசெய்துசிலவேளைவழிபாடுசிறிதுஞ்செய்தார்
தெவ்வூறுருழிந்துங்கணப்பட்டிரானம்மைபாதிகழ்பாகனு
செவ்வூனமுந்திருமிடபதநின்மிசைசேவைபீந்தானரோ. (௬)

பம்மைக்கணக்கோயினடுவாழுமபிராமபாமேசனு
நம்மைப்பொருங்கண்ணியுடன்வந்தபொழுதேயவறவோரெலாப்
வெம்மைப்பிறப்பற்றகதியாதுநரினுங்கொள்வேமென்னலுந்
தும்பைத்தொடைச்சென்னியசையச்சிரித்தீதுசொலவுன்னினன்.

நமிலிங்கமுடனுதலொன்றும்பழிப்பற்றநமுலோகமொன்
றுமிவண்பிறக்காதபடியாளுமெனநன்குரைத்தானுடன்
றமிழ்தந்தமுனிவோனிகராகியவிர்தந்ததவரியாருமங்
கமிழ்துண்டசுரர்நாணமுதலோதுகதியூடடைந்தார்களே. (௮)

உடல்விட்டிறத்தக்ககதியீனமென்னநன்குணர்ந்தோதிடா
ரிடமிக்கதிருமாதையிறையுட்புகும்பேற்றையெளிதென்றுள்வ

ாடல்பெற்றவண்ணப்பெருஞ்சிங்கமனையார்சொலருணூனலங்
கூடமுற்றகவியன்னகவிவாணரறியாதக்கரியாகுமே. (௯)

அருளாடலுந்தொண்டர்வழிபாடுமேசொல்லுமணிநைத்துநீ, டிருளாருமெறியாடன்முதலானதிக்திக்குமிழிவானநுட், பொருளானைசமுதலோதல்புதுமன்றியொன்றுப்புகுஞ்சுட்டவாய்த், தெருளாளனுருவச்சிறப்பொன்றுநுவையாறுதெளிமின்களே. (௧௦)

ஒருகாலமாமேருவெண்முட்டையுண்ணின்றுதித்திட்டதாய், குருவாயொருகமேணுமவிப்பெரும்பேறுகொண்டாவரோர், திருநாமநதியின்முதநிபெறுகோடிமுனிவோர்கள் சிரபாடிடத், கருகூலமாமியானுமொருவாறுசொற்பேறுங்கடைதீரவே. (௧௧)

பொற்றைகடாத்தமாயமதுரியின்புராணத்துக்
கொற்றுளானைசெய்பக்கொள்ளவினைபுவர்க்கணக்கேற்றம்
பெற்றபொகியைப்பிராணுதிக்கோராருகுமெமூமாகவர்
சீற்றகதிபெற்றகதைபாடிடச்சிந்தைசிந்திக்கவே. (௧௨)

முற்றிற்று

ஆக படலம் ௬-க்கு கவி உ௱எ௫.

உ

சிவமயம்.

சத்தரிஷிகள்பூசித்தபடலம்.

வேதாவொருக்காற்பெறத்தோன்றிவெளிக்கிரிநேர் மலயமலை, மீதாயிரங்கண்ணினர்போற்றவிளங்குங்குறுமாமுனிவோனுஞ், சீதாராமன்களிகூரத்திருநான்மறையின்பொருண்முடிவை, யோதாமகிழ்தேசிகனெனுமாண்பொன்றித்திகழுமுரவோனும். (௧)

சினக்குந்தொறுமாதவம்பெருகித்திகழுந்துருவாசனுஞ்
சிதனைக், தனக்கென்றொருசேயப்பெறாதற்றவந்தோய்பிரு
குமாமுனியுங், தனக்குமகிமைப்பாராசனுங்கடினதவத்தாழ்
கண்ணிமையா, ரினக்கும்பலேட்புண்படுதறியப்பாவின்பமளிக்
குங்கோசிகனும். (௨)

இதில்புகழ்சாக்சுஷர்வேதசிந்தாந்தத்தோரனைவருக்கு
ங், கோதில்குருவாமெனக்கங்கைக்குளிர்நாவாயினிடைதோ
ன்றிச், சோதிமகமேருவிற்பவளத்தும்பிவளை நூல்சொன்னே
னும், பாதிமதிச்சென்னியனருளாற்பதமொன்றடையும்படி
நினைத்தார். (௩)

எந்தத்தலத்திற்கடிதருள்பெற்றிடலாமெனநன்கெண்ணி
யெண்ணி, யந்தப்பமன்றி நவ நாமாத்தூரொன்றறிந்தப்
பாற். சக்கிரியேமுதலாந்தக்கானமுழுதுங்கணந்தேகிப்,
பந்தப்பிணிதீர்க்கருள்மகிமைப்பம்பாநதியிற்படிந்தெழுந்து.

செய்புஞ்சடங்குமுற்றியற்றித்திருக்கோயிலினுட்புகுந்
தான்றன், மெய்ப்புப்பாவின்புழுந்துவப்பாற்பிறைபோலநன்
றுடைவடிவனைக், கையுந்தவந்நேர்த்துயிலோபோன்றொளிரு
மிலிங்கந்தனைப்பணிந்து, கைகுவித்துத்துதிகூறிக்கன
பற்றிருந்தார்கருதினரால். (௫)

இந்தப்படிசென்றேபோக்கியெழுவர்தாமுந்தினந்தோறுங்
கந்தப்பணிமாமலர்ப்பூசைகாலமவருத்துச்செயத்துணிந்தா
ர்த்தககாணதண்டமுநலாயதவமுமிகச்செய்தார்
சந்தப்பவளத்திருமேனித்தனையுங்கருதச்சலித்தில்லார். (௬)

அன்னமறந்துகாய்கனிநீருந்தியவையுந்தணந்தப்பாற்
பின்னற்கரியசருகருந்திச்செமியாவாயுவினைப்புசித்திட், டின்
னற்படுநாளையிலபிராமேசன்விடைமீதெதிர்வந்தா, னென்ன
படியோகளிகூர்ந்தங்கெழுவர்தாமுமிறைஞ்சிநின்றார். (௭)

இன்னபடியாங்கவர்துதித்தாரொன்றோர்புலவன்விரித்
தீண்டு, பன்னத்துணிவானெனிலந்தப்பான்மைக்குவமைபகர்

கின்றேன், சின்னவெறும்பின்வயிற்றுறுமோர்சிறியபுபூவெ ற்கடலினையுங், தன்னதறிவாலளவிட்டுச்சாற்றத்துவங்குர் தகைத்தம்மா. (அ)

வெய்யமெவாயிலெதனர் தொழுபுன்விடையோனுரைட் பானினிநீவிர், யான்பெறப்பதிலெயதவாதெரப்பதத்துமெ ளிதேதவிர், நீண்டும்வமியுறுவாயுந்திகழுட்பயனுமுறக்கொ டுத்தா, மீண்டுந்தவஞ்செய்திளையன்மினென்றிட்டிலிங்கத் திடைபுகுந்தான். (கூ)

மற்றைமுனிவோர்தமைப்போலுமகிமையினர்தாமிவ ருமென, வெற்றையினிலியாண்டெவர் தாமுமெண்ணெண் ணுதேயிமயமெடும், பொற்றையிடம்போய்ப்பெண்கேட்கப் போகத்தகுநற்புனிதரென, வற்றைப்பொழுதாங்கிவரையச் ரேருவழைத்தான்மகனையழிக்கேதாமென. (கய)

இந்தமுனிவோரிவ்வுலகமிலங்குமளவுமுற வா
ரெந்தவுலகிலெவரேனுமிவர்பெருமவர்தலையாரடிக்
சகங்மலர்ப்பூசனைபுரிந்தாற்களவிலவருமவர்தப்பாக்
வந்தன்னவர்க்காமிதஞ்செய்வாரவ்வடாற்றுண்மைமனஞ்சான்றே

தெய்வப்புலமைமிறைமுவோராய்த்திருவார்வழிபாடுடை யோராய், மெய்வர்ததனைச்சொற்பொழிவோராய்வெள்விக கொலைக்குமிசையாராய்ப், பொய்வக்கனைச்சொற்துவக்கா ராட்புறநூலினர்பிற்போகாராஞ், சைவப்புனிதர்களிகூறுந் தமிழேனையர்க்கோர்சமனுமே. (கஉ)

அம்மைவழிபாடொத்தவுடனேமுகனுங்குகனுமுயல், செம்மைவழிபாடொத் தப்பாற்சிரார்முனிவர்ச் செப்பில னென், றெம்மையிகழேன்மின்புலவீரிதன்முற்பிறந்தவட நூலார், தம்மைவினவித்தெளிமினதன்றகையாலுவாைக்கத் தக்கதன்றே. (கங)

யாருமுணவிற்றொழுவாமுன்னீந்ததந்தையினிடத்தறாம், சேருமுறியச்செய்யுந்தற்றந் திருப்பொருட்டோர்கலியுகத்தி ற்பாருமறியக்கணபதிதான்பாகமுற்றுவக்குந்திருவாமாத், தூ நனிலிங்கத்தினைப்பூசித்தாயர்சிறப்பெற்றமையுமாம்.

முற்றிற்று.

-ஆக படலம் ௪ ௩-க்கு கவி உ௱ ௪௰௪.

௨

சிவமயம்.

விநாயகர்பூசித்தபடலம்.

யாவருமுற்றொழுமீடிடைத்தெய்வமாய்க்
கவளவேழமுகங்கொள்விநாயக
னுவமைதீர்புகழோங்கெழின்மாதையூர்ச்
சிவனைப்பூசைசெய்யும்படிசிந்தித்தான். (௧)

நலியுநன்மைகொண்மற்றையுகங்கணித்
தொலிகொள்புண்ணியமுள்ளடங்கிக்கொடும்
புலியையேர்பவம்பூக்கொளிர்காலமாங்
கலியிற்செய்யக்கருதியதன்கொலோ. (௨)

அண்டர்மட்டொறியச்செலாமலிம்
மண்டலத்துமனிதருங்காணவே
கொண்டணுக்குலாவடலாகுமேற்
றெண்டர்சிற்சிலர்சூழ்தரவேகினன். (௩)

செக்கடிக்கணுந்தீமைசெய்வீட்டினும்
புக்களிப்பனைகொண்டருள்புங்கவன்
றிக்கறிந்திடச்சென்றதந்நாளில்வாழ்
மக்கள்கண்களின்மாதவப்பேறதே. (௪)

சென்றவூர்தொறுஞ்சிற்சிலபத்தரோ
நன்றனந்தநவின்றுவணங்கினார்
நின்றமானிடர்பேரிதொர்சாலமே
யென்றகங்கொடிகழ்ந்தகன்றரரோ. (௫)

அரைநொடிக்குளம்மாதைதயிலார்திறம்
பரைமுதற்றருபாலனுக்கில்லையோ
விரைவொழித்துநன்மெல்லெனச்செல்லவித்
தனையியற்றுதவப்பயனாகுமே. (௬)

பங்குபற்பலபட்டுநன்னீர்மிகப்
பொங்குதண்கரைப்பூம்பொழின்மாதையூர்
தங்குமீசனைத்தந்திமுகப்பிரான்
கங்குனீங்கொருகாலையிற்கண்டனன். (௭)

அமலஞானசம்பந்தனையன்னதோர்
கமலநாயகனெண்கதிர்வீசனு
நிமலநீறெனினெட்டுயிர்க்கும்பொரார்
சமண்மதம்புரையுந்தமஞ்சாதலும். (௮)

பதுமம்பூத்துப்பமரமுண்டாடலுங்
கறுமென்றல்லிக்கணங்குவிந்தொஞ்சலுஞ்
சதுமநன்புரைவார்தடஞ்சார்தலும்
பொதுமடந்தையர்சிந்தைபுழுங்கலும். (௯)

கூகையாவுங்குகைபுக்குறுதலும்
வாகைவேள்கொடிவாரணங்கூவலுஞ்
சாகைவானரமாதியதாவலு
மோகைவல்லியமாதியொடுங்கலும் (௰)

கொல்லுங்கள்வர்தங்கொட்டிற்குறுகலு
நல்லுணர்ச்சியர்தந்தொழினண்ணலுஞ்
சொல்லுங்காலைதுலங்குமச்சுத்தநா
ளொல்லுஞ்சோமனுக்குள்ளதுமாயதே. (௧௧)

கண்டென கதுவிக்குங்களிற்றுனனற்
றெண்டிறைகொண்டவண்டோயுநல்லோரெலாம்
பண்டிரைக்குடப்பானருள்பாலனென்
றண்டினென்டொடிபணிக்கேத்தியே. (கஉ)

மாதவஞ்செயவல்லவர்காணுநீ
பாதகத்தநூம்பார்க்கவந்தாயினென்
றோதவேண்டுமொளித்திடலென்றலும்
வேதநான்முகல்விந்தகன்சொல்லுவான். (கங)

மேவலாக்கதேகய்க்கொராலயக்
காமர்மெய்க்குமைந்தசகன்மைந்தனென்
கமவனைக்கொல்கணபதியன்பிறு
வைநுடற்குயக்கொலம்வந்தெய்திற்றே. (கச)

எந்தவானவர்பாலுமிவ்வாறவர்
சொந்தவேடமுற்றோர்பலர்சூழ்ந்துளார்
பிந்துநாயமிறைபகர்நூல்களுட்
ரந்தமாப்பல்குப்பிறுநாற்றுமே. (கரு)

ஓசைசேதாய்பலதீங்குமொழித்துளின்
மாசைசீக்கும்வழக்கமொன்றுண்மையா
லாசைபோற்றருளாழகேசனைப்
பூசைசெய்யிருப்பாவிவண்போந்துளேன். (கசா)

என்றுகூறினனியாருமவாவ
வொன்றுபக்குவமட்டிலுணர்ந்தன
மன்றுளார்கள்றைந்துமெண்ணலு
நன்றுதீதெனிரண்டிடைநண்ணுமே. (கஎ)

உடனெழுந்தவ்வொருசிவலிங்கத்தைக்
கடகரித்தலைக்காரணன்கைகளாற்
றொடலும்வன்றொழிற்றுட்டக்கவியனுட்
படபடத்துப்பதைத்ததுநெஞ்சமே. (கஅ)

உண்டியாதியுறத்தொகுத்தொண்மலர்
கொண்டிறைஞ்சிக்கைகூப்பியுள்ளக்களூற்
கண்டிருந்தனன்கற்பகத்தான்முதல
லெண்டிசைப்புலவோர்களுமேங்கவே. (௧௯)

சித்தர்முற்படச்செப்புகணங்களும்
பத்தர்தாமும்பலபதிமன்னரு
மத்தனைத்தனிமானதபூசைக்கா
சித்தமன்புரிபூசைகண்டொல்கினர். (௨௦)

கலியன்றன்மைதனைப்புகுத்தாதொழி
தொலிகொண்மற்றையுகங்களொப்பாகிய
மெலிவுபுராவலாணையினைத்தொரு
வலியமாதவனென்றனர்யாவரோ. (௨௧)

ஒருவிகாயமுருவிருநாப்பினுங்
குருவெனக்காங்கூப்புங்குவலயம்
பொருவின்மாண்புடைப்பூட்கைமுகேசனை
யிருமையுற்றவர்தம்முடனெண்ணிற்றே. (௨௨)

புனிதவேதம்புகலுருக்காட்டியுங்
கனிதருங்கருததெய்திலர்காசினி
மனிதருளிவரில்வருகென்றோர்சொல
வினிதறைந்துபிணங்கலுருர்களே. (௨௩)

இன்னதன்மைவிரித்திவணியான்மிகச்
சொன்னதாலினித்தொல்லுலகுற்றவ
ரென்னவேடமொடியாதிர்தோன்றினு
முன்னவன்செயலென்றுமுன்னோர்களே. (௨௪)

கொல்லவந்தகொடுந்தகைக்கூற்றன்னோர்
நல்லவேடப்பொலிவினைநம்பியே
யல்லறீர்ந்தவிருவரையன்புடன்
சொல்லன்மெய்த்திருத்தொண்டத்தொகையரோ. (௨௫)

எந்தலத்தேவர்கள்முற்பூசைசெய்
மந்தகக்கரியானனன்மாதையூர்ச்
சித்தருக்குச்செயுந்திருப்பூசைமான்
மித்தகைத்தென்றியம்பரிதாகுமே. (உசு)

சிறிதுநாளங்ஙன்பூசனைசெய்திட்டபின்
மறியிறைகொடான்மழுவணிகைப்பிரான்
பொறியிறான்முதற்புங்கவர்சூழவா
யறிதர்சூழ்நிலைமைந்தன்முன்றோன்றினன். (உஎ)

கன்றிசிங்கைதகனிக்குவணங்கரு
நம்பிமன்பெரியொரியனைத்தரு
நம்பிமாகுழகையிக்கவன்மாந்தபின்
வந்தனமென்னிடந்தாழ்பவராய். (உஅ)

பாதுயிர்புமிரண்டவலமேகமே
கடனுமைப்புயிகொன்றையொப்பாவன
நாறுங்கொள்ளக்கருமென்பனிந்தப்பாய்
வெறுப்பியாவருமெச்சவொன்றேதுவான். (உகூ)

பன்னைபெமுகலோசெவமானுதின்
பன்னைநாடியொர்ஜாமொழிந்திடி
புன்னைவிட்டநூனாந்தவர்க்காமினிப்
பின்னைவேட்கையென்றுன்டெனிற்பேசென்றான். ()

நடையுங்கொறுமியானிங்கைமல
முடையனுறியென்றநெட்டியக்கணம்
படையிலிங்கத்துட்புக்கினன்றதைபோன்
மடையுடைத்தெனவார்க்குமநந்தனும். (௩க)

மைமந்தனும்பலமாந்தர்முற்றேற்றனீக்
கந்தவாலயத்தின்கணவிர்ந்தேதார்
சுந்தரச்சிலையாமதாட்டோய்ந்தனன்
பிந்தவாங்கியல்பெற்றியொன்றேதுவாம். (௩௨)

வேறு.

எமனொருநாட்டகற்பொழுதிலிந்திரனூர்விட்டுவரு
மமரமகளிரைப்பார்த்திட்டளப்பருமையலின்மூழ்கித் [மோர்
தமம்வருமுன்னிவர்த்தொடர்தற்குதியன்றென்றொருதுங்கிய
சிமயம்விடுமருவியெனச்சிந்தியதுசுக்கிலமே. (௩௩)

அக்கணமேயப்புனலோராணலுருவத்தானவனாய்ப்
பக்கலெழுந்தெனக்கியாதுபணியென்றானவன்மகிழ்ந்து
முக்கணனைத்தொழுதுளத்தின்முன்னியசீர்பெறுகென்றான்
றிக்கறியப்பெரிதாகவனுசெய்தவனைத்தெரிசித்தான். (௩௪)

பின்னிகழுமாறன்றிப்பேசுமொருவிதத்தானுந்
தன்னிலைமைக்கிடையூறுசாராதவரம்பெற்றே
பொன்னிலக்காமுதலாயபுத்தேளிரனைவோருந்
துன்னிடர்ப்பட்டழமாறுசெயற்கரும்பலதுயர்செய்தான்.

வானவர்தந்துயர்முழுதுமாறுயாமாகியதாங்
கானமட்டும்பொருதினைத்திட்டவன்கொடுமைமிகக்கண்டே
பானன்மலர்வயன்மாதைப்பதியபிராமேசன்முற்போ
யீனமறுதகைமையாளனென்றெல்லோருமிறைஞ்சச்சூழ்ந்தார்.

அப்பொழுதோர்சீரியானைமுகத்தைந்தங்கரனை
வெப்பொருங்கோர்வடிவாமவ்விறலோனைக்கொலுமென்ற
திப்பொழுதேவழிபாடிங்கிழைக்குதுமென்றெல்லோருந்
துய்ப்பொடுதூபமுந்தீபத்தொகையுமிட்டுத்துதித்தார். ( )

எத்தேவர்களுங்கூண்டாங்கியற்றுபணிக்கிரங்கியருட்
சித்தேசர்தவப்பயனுத்திகழும்விநாயகப்பெருமான்
மைத்தேசுமலியாகுவாகனத்தின்மலர்செச்சைக் [ன்றே.
கொத்தேய்க்குநிறத்தோர்பெருங்குன்றெனத்தோற்றினான

கொன்றையறுகாத்திமதிகுலவுசடைத்தலைசேர்கைக்
குன்றையொத்தோர்கோட்டடனங்குசபாசங்கனியேந்தி
யென்றைவயிற்றமைந்தாகுவிவர்வானைமான்முதலோர்
நன்றையளித்தாளென்றுநனிதுதித்துவணங்கினரால். (௩௯)

அன்னவர்தந் தாயபோரந் தங்கருண்மயிவுற்றனைவருக்கு
முன்னவனுங் கணநாதன் முகுந்தனாது முகம்நோக்கி
யென்னாருகிலன்றே றயினவனிதற் போர்வெந்துயர்கருது
மின்னலுறுவன்னை மென்றனியா வருதமிக்கின் புற்றார். (ச0)

எவ்விதனிங் கிரங்களோபு மெனிநிலொழிந் தருள்கூடவமை
செவ்வியமையமொழி கேட்டிச்சிந்தைமகிழ்ந் தேவர்களை
யவ்விகமேலான்றிறாடியலைந்தருர் குமரர்களைச் சூழ
வவ்வியணிவார் மாதைகைப்புறம் வந்தாப்பரிந்தான். (சக)

வேறு.

குழிப்பு.

தத்தனத் தனன தந்த தன தந்தன

அக்கினித் திகுவனங்குவாலகண்டதா
லந்தனந்தமார்தம்படைநெருங்கவே
விக்கினத் தொழின்முயன் றெழியவுஞ்செய்சி
மிக்குடைப்பெரியபண்டியிறைவன்றனே
ருக்கிரக்கருதிறங்கொளெவிமன்றன்மே
லுற்றெதிர்த்தனனிரண்டுபடையுஞ்சின
டொத்திரத்தந்தியுண்டெணியுங்கைசேர்
துப்பமைத்துடனிரிந்தனர்களும்பரோ. (சஉ)

தந்தத்தனதந்ததனதந்தன

அந்தவன்றொடைகண்டரிமுனிந்துபோ
யந்தகன்புதல்வனன்றியவர்தங்கண்மேல்
விந்தமென நிகழ்ந்துண்டுகொடைறைந்தான்
மிஞ்சசைந்துனருடம்பொடவனின்றபோர்
தொந்தகன்றனர் தெரிந்தெரியுமங்கிநா
ணும்பொருந்தருவனங்கவன்முனஞ்செல்போ
திந்தணிந்தகலைகொண்டகனிறிங்குவா
வென்றடர்ந்துபடையுஞ்சிலசொரிந்ததே. (சங)

தனனதான தனதந்த தனதானா

அவைகளைகிடையா தணுக்குணையுயிர்க்குலா
வனைனன்மெனியையாருக்கலிவிகலமே[illegible]
[illegible]
[illegible]
[illegible]
வினைதவாதிவலிமிக்குமெனவாடியே
[illegible]
தருபவாம்வாகினைத்தகுநாகினையே. (௪௪)

தனனதந்த தனதந்த தனதானா

ஒருவிதஞ்சமரினுக்களர்வுறுமொரு
வணைந்தனுற்றுடன்விரைந்தருகிசெறிய
பருமைபெற்றகவளங்கொலெனவாலுமெள
பலருமெச்சிடவிழுங்கினன்முறையினி
டருமையிற்செய்தவமின்பயனிதேயென
வறிவின்மிக்குயர்பெருந்தகவுளாய்சொலு
நிருதிலத்தினதுவெந்துயருமேவுபூ
தருமயற்றனசுகம்பெறுமெவியே. (௪௫)

தந்ததந்த தனதான தனதானா

இந்திரன்பிரமதேவனெடுமான்முத
லெண்டருப்பலர்மேகினாதுவாரின்வாய்
மந்திரங்கொள்முனிவோர்தவசினிடத்
மண்டலந்திகிரியார்துயர்மையாக்தி
யத்திறஞ்செயவிநாயகனையுவிட
தாதியும்பகலுமோதியநுமாலைதரு
முந்திநின்றதமுகேசனாரியார்களே
யொய்ம்பனொன்றுமுதல்வாய்மையைநிலையாயதே. (௪௬)

தந்ததத்த தனதான தனதத்தனா

ஐங்கரக்கடவுண்மாதைநகரத்தில்வா
ழுங்கணர்க்கினியபூசைசெய்ததற்பினே

[illegible]ங்கணைக்கினியபேர நுமவுணர்க்கொலா
[illegible] [illegible]ந்தாமரைவாய்வருள ல்லெட்டிரு
[illegible]தனக்கரிய [illegible]ழவுற்பெரு
[illegible] பூசையதியற்றியே
[illegible] [illegible]வேல்கொட [illegible]கொல்ஙி
[illegible]றுதற்கண [illegible]மடுத்தரோ. (சஎ)

முற்றிற்று.

ஆக படலம்-கஉ-க்கு கவி [illegible].

உ

சிவமயம்.

முருகர்பூசித்தபடலம்.

[illegible]ந்தமிழ்ச்செந்நி திருவாமாத்தூர்ப் [illegible] செயலாற்
[illegible]நின்முன்றேன், [illegible] [illegible]வியவானவ
[illegible] [illegible]தங்கள்போமோ, [illegible] [illegible]ருவாருமெ
[illegible] [illegible] [illegible]ந்தெவ்வுதற்தெவாருமு
[illegible]ன்றெழுந்தாங்கெய்திறுனை. (க)

அக்கினிதன்மனைவிகொருமாறுருவத்துதித்தோனுமா
று [illegible] [illegible]நதிச், சக்கிழப்பெபாறியாகிக்குதித்தானுமுமைவயிற
[illegible]ற்பவரிவந்தோனு, முக்கிடாண்டியனுமைவணிதமகன்றமிழ்
விரதபெருத்தோர்தாமுந், திக்கினர்போற்றியமுருகோனெனக்
கொள்வாரென்மொழியாற்கிணயகொள்ளாரோ. (உ)

வத்துநிலேயறியாதவிளம்பருவக்கவுமாரர்மயிலோன்செ
யயுஞ், சித்துநிலேயுணரார்கள்பலமுருகனெனச்சொன்றாற்சிந்
தைநோவார், தத்துவதேசிகனுகுமவன்பரிபிணிறகொன்றைத்
தலைக்கொண்டோனு, முத்துறழ்பல்லாய்ச்சியர்தம்மனைதொ
றுமொவ்வோருருவாமுன்னுற்றானே. (ங)

எச்சமயத்தாறுகேவுநெவன்குரவனொல்லோருமெய்யுறிந் தேவேலானென், றச்சமறநதெளிவார்க்கேயானந்தப்பொருளா டவினமுதமெய்த்தரு, சொச்சநிலைகைவருமற்றையரெவர்க்கு மென்றாளுந்துயரோராலும், பச்சறுகிட்டார்க்குமருளொருவ னுளானுமாதைப்பதியின்மாதோ. (ச)

அங்குவாதமுநகைமுதலாகமத்திஸ்வி நிபிறருக்கரிவிப் பாண்போற, பொங்குநங்கைக்[illegible] கதா[illegible] தகனைசிலாரண மலர்கொடுயர்பூசைசெய்காலை, குங்குமகருணைறைப்படிமா பலிலனையா[illegible] மேற்குலவக்கண்டார், னைகுநாவா ணவர்முனிவோர்க நம்வியப்பவணங்குப[illegible]சிறுனே ( )

அம்மையுமைமாமிரா[illegible]த்தநமைர்பிரணை[illegible] மதி, செம்மைய[illegible] கடைசாலுச்சிமுகந்தாயாரநியா கிரிபோனுறுமுலை, முமையம நிளிர்க்கசிராணினவி [illegible] யாதேவரிடமுமுறா[illegible]வா, ளைம்லையபுசின்ன நளா[illegible] [illegible]லைமெய[illegible]வினா[illegible]வை[illegible]னைா[illegible]சொா[illegible]. (ரு)

[illegible] நகு[illegible]நாமைர[illegible]க்த[illegible] [illegible], [illegible] [illegible] சொருவாறும், [illegible] [illegible] மவ[illegible] [illegible]கிகிரீசனீ[illegible], [illegible] [illegible]மெனைகுருக்நுக்கிர்தரானைறு ( )

இ[illegible]திறைபருசூரனுடப்பாகியிறுப்[illegible] [illegible] மனையித், தாதிமுகன்மபிலொன்றுமுாதுகுகன்பனை[illegible] னுஞசாருப்பதார், பத்திபடவேறுமயில்கருமனர்தமுமளா வாம்பகர்பவெலலா, நதிபணியாமாதுதூர்ாதனருளியபயில போனலத்தவன்றே. (அ)

தேவர்கடங்கோமானுஞ்செவ்வாயுமக்கினியுஞ்செசந்தில் வாழ்பல், காவலருமற்றுமுளைப்பாருளைக்கும்பலர்தாமுங் கைவேல்கொண்டார், மூவரும்போற்றியதிருவாமாத்தூரிற் சிவபெருமான்முருகப்புத்தேட், காவலொடுசமைத்தளித்த வேற்படைக்கொப்பாகுமெனவறையொண்ணாதே, (கூ)

சூரனுடற்பாதியினுற்சமைந்துளசேவலுங்கனலோன்
சொரூபமான, வீரவன்சேவலுஞ்சாத்தன்விறற்பெருஞ்சேவ
லுங்குமரவேட்கென்றந்நாள், பாரணங்கின்முகம்போலுமா
தைநகர்வாழ்பரமன்படைத்துநல்கு, மோரடற்செஞ்சேவலி
னுக்கொப்பாமோசாபமதோடொக்குமன்றே. (௧0)

வேலொன்றுமயிலொன்றுஞ்சேவலொன்றும்பெற்ற
குகன்விடைவல்லானைப், பாலொன்றுமுலைக்கவுரிதனைவண
ங்கியவருளைத்தாபணிமேற்கொண்டு, நூலொன்றுமுரப்பிர
மற்றனையிடலாதியவாடலூறுஞ்செய்து, காலொன்றுசிலம்
பினுமைநருமகவிர்பெறுமகாநங்கணத்தைக்கூட்டி. (௧௧)

பூநர்பொருப்புடைசூழத்தேவர்குழாநணிபோற்றப்புதுத்
தேரேறி, மாநவனுன்முகன்மகவானக்கினியாதியர்பெரிது
மகிழ்ச்சிநேரய, வாநவன்முற்புனலிறைக்குமருந்தவமாமு
னிவருளத்தச்சந்திரக், காந்கரிற்றலைமைபெறுதாரகன்மேற்
போருமாறுகருதினனே. (௧௨)

வேறு.

தானதத்தநன தந்ததன தானனா.

ராசிபப்பிரமனன்றுமகமாயைநேதாள்
காதலித்துதவுமைந்தரொருமூவரே
யாசிபெற்றமுநல்வன்பொருவில்சூரனே
ராயுநிந்நநடுவன்சநபதாகியே
மாசில்சந்தமுறுசிங்கமுகனோர்பினேன்
வாரணச்சிரசினன்றலையொராடுபோல்
வெசியத்தருவர்பின்புவருவாளினோர்
மேதினிக்கிடர்செயுந்தொழில்விடார்களே. (௧௩)

தானதானனத்தானதனதானனா.

ஆனைமாமுகத்தாரகனைமோதுமா
றுசையாயிமக்கோடருகிலேகினன்
மீனைநேர்விழித்தாயுருவமானகூர்
வேல்விசாகனப்போதவன்விறலியே

தானையோடெதிர்த்தானிருவர்தாமுமே
சாயகாதிதொட்டேடெடுதுபோர்செய்தார்
வானைமாநிலத்தோடளவினுன்முனும்
வாய்மையாளர்தத்தால்வெருவினார்களே. (கச)

தந்ததந்ததனதந்ததனதானனு.

அங்கியன்றபலசண்டைகளுமாதிரா
ளம்பியின்கண்வருமைந்தன்முதலோர்சொனார்
தொங்கிடுங்கையிருதுண்டுபடவீசியோர்
தும்பியென்றதலையுந்துணியநூறியே
சங்கினந்தொனிசெய்பம்மைதிகழ்மாதையூர்
தங்கிடும்பாமர்தம்புதல்வனுடினன்
மங்கியன்றவனெழிந்திடலும்வானுளோர்
மங்களம்பலமொழிந்தனர்கள்கூடியே. (கரு)

தனனதத்ததனதத்ததனதன்னனு.

அவனையட்டபினவற்குரியவண்ணனு
மரிமுகத்தகுவனைச்செறுதனெண்ணியே
சிவனளித்தபடைபெறறுளதொர்செம்மைவேள்
செயமுழக்குடனெருக்கினனவெண்மையா
னுவரிமத்தியில்வருத்தநகர்தன்னில்வாழ்
வுறுதன்முற்றுணைவனுக்கியல்வபன்னியே
தவறுபட்டவசைசுட்டிடவினுன்னியே
நலைகையற்றுமுனைத்தழைதல்கண்ணியே ()

தனனதய்யதனதந்ததனதானனு.

சமரில்வெல்கலனிமைந்தனெனநாடியோர்
சபதம்வீள்ளுதலுமன்றுபுரநீறவே
தமதுபல்லொளிதருங்கனவிறல்வெல்வார்
தனையன்வல்விடுநடுங்கொரொலியாலனோ
னமதுசெல்வமொடுடம்புமிறுமேயெனு
நவிவுகொள்வது தெரிந்தவனதாண்முனு

ணமரரை கெள்வயிரம்புனைவதேவியே
யழிவுசெய்தனனவன்றமையன்வாடவே. (௧௭)

தானதந்தனத்தனனதனதானனே.

கோரவன்குணத்தவுணர்களினேரில்சூர்
கோபுரம்பெயர்த்தடன்மதிளின்மோதும்வாள்
வீரனன்குறைத்திடுமொழிகொளாமையான்
மேதகுந்திறற்றுணைவருயிர்போயுநீ
டூரவும்பனைச்சிறைவிடுகிலானென
வேலெல்கந்தனுற்றமர்செய்முதனாளே
னோரவிர்ந்தட்டழிவொடவமானமாய்
நீணிறங்கொள்வெற்பெனவிலகினனரோ. (௧௮)

தந்ததானனதனனதனதந்தன.

தங்கையானபாதகிமொழியைநம்பியே
தண்குலாவும்வானுலகின்மிசைவெம்பியே
கொங்கைமாதரூர்தொறுமழுதிரங்கவே
கும்பலோடுபாலகரையுமிழந்தசூர்
கங்கையாறுநாணியவிசைகொள்பம்பைநீர்
கண்டமாதையூரடிகடருகந்தனேர்
முங்கைபோலநாணுபுசெலன்மறந்துபார்
முன்சொல்பூதமாகியுமவிர்தல்விந்தையே. (௧௯)

தானதனதானனதானந்தனதன.

சூரனதுமாயாவினோதங்களுடியே
சோர்விலதுநீபாரொறுவங்குநீடினு
ருரணனுமோராதஞானங்கொள்சேயவே
ளார்வமொடனேறுடலாலன்பிலாழ்வுறு
வீரமழிவாயேதெதோவிண்டுதாழ்முன்வேள்
வேறுகுணமாமாறுபேதஞ்செய்தானதா
வீரமிலனுயேசினனம்புவாரியூ
டேபெரியமாவாயுமேலுந்தினனரோ. (௨0)

தானதந்ததனதானதனதானனா.

சாகைமிஞ்சுமாமேமுதலவாயமா
சாலவங்கம்வெகுவாயுறலுமாயவே
யோகைகொண்டுருகன்மோதினனோர்கூடாவா
ளோடுசொந்தவடிவாயெதிரும்வேளையே
வாகைதங்குகதிர்வேல்கொடிருபாதியா
வார்தலும்பழையஞானமுடனுடல்சேர்
தோகையம்புளொடுசேவலுருவாகியே
சூரனின்றனன்விணாடுகுடியேறவே. (௨௧)

வேறு.

இக்கதைவிரிவெல்லாமுமியற்றமிழ்க்கவிகளாலுஞ்
செக்கர்நேர்சிவன்வாழ்கச்சித்தேசிகன்முதலோர்சொன்னார்
முக்கணனருளாலியாவர்முருகவேள்கலைபெற்றாலுந்
திக்கறிதரச்சூர்போல்வார்ச்செகுப்பதுகடனுமன்றே. (௨௨)

மட்டவாரிதழிச்சென்னிமாதையூரபிராமேசற்
றொட்டுமுனபூசித்துய்ந்ததொழும்பர்தந்திலகம்போல்வான்
விட்டுணுகமலயோகியெனறொருவிடலையன்னாற்
கிட்டுளபெயரானமும்மூர்த்திகள்கலையியையதறோன்றும். ()

தாவறுங்கலைமின்கேள்வன்றனைபடவிடுத்ததாலுந்
தேவர்தந்துயரமுற்றுந்தீர்தரச்செய்ததாலும்
பாவனாதீதஞானபலம்பலர்க்கருளலாலு
மூவர்தங்கலையுந்தோய்வார்முருகனங்கிசமேயாவார். (௨௪)

கருணையைமுதன்மையாக்கிக்கல்வியையதன்பின்னாக்கி
யிருளறுமுத்தியெய்தற்கேதுவாஞானந்தன்னைப்
பொருவிலவ்விரண்டின்பின்னாப்புணர்த்தலிற்புகலுமப்போர்
திருமகள்கணவன்போர்முற்றிகழ்தரப்பெற்றதம்மா. (௨௫)

தெய்வமத்தனையுமாதைச்சிவனருட்செயலென்றோரா
தைவரிலொருவன்றானென்றலமருமிளமைவாய்ந்த
சைவரோயிந்தக்காதைதமியனேனவனாற்றேறிச்
செய்வதாமுண்மையாவுந்திருவுளமறியுமன்றே. (௨௬)

என்னதுள்ளநுபவதகோடியல்சிலகதையுஞ்சேர்த்துக்
கொன்னகுதமிழாற்சொன்னகுருபரதத்துவத்தி
லின்னதன்குறிப்புச்சற்றேயிலங்குறக்காட்டியுள்ளே
னன்னபோதீண்டைக்காதையாமெனவறிந்திலேனே. (உஎ)

இந்துசூடினாரமர்தைக்கியல்புராணத்தின்காதை
வந்துறுஞாயமெல்லாம்வகுத்துரைத்திடினுமுன்னூ
றந்துளவியாசனுதித்தவரையுமதியாப்பொல்லார்
வெந்துறுமனத்தாரேயிகவிகழ்ந்தழிவாரன்றே. (உஅ)

சுந்தரன்சேரமானுங்கொண்டார்விண்வழிபோமன்றே
பந்தவெண்கயிலைசேர்ந்தவெள்ளையைக்கம்பனுளி
லிந்தஞாலத்திலுற்றேன்னினுமிசையுமாந்தர்க்
கெந்தவாறெவர்சொன்னாலுமினியதாமியல்பொன்றுண்டே.

நம்பனோடிகன்றவெள்ளைவகயிலையிலுறைந்தாடன்னை
நம்பலாலவன்பாருடனுநின்றுளனுஞாயந்தா
னும்பருர்ச்சேர்ந்தன்மாயனெந்தவர்சிலருமீண்டை
வம்பரைச்செருக்குமாறுவயங்கலுண்டுணர்ந்துய்வீரோ. (௩0)

வேறு.

நற்றுளார்புகழ்நலமனர்கணவருற்செயப்பட்
டெற்றும்வாய்நிலைக்கடற்கலையுடுக்குமிவ்வுலகி
னற்றுவாயயுநஞ்செலச்செலக்கொடுமன்போ
லுற்றுநீங்கினவாங்கலியுகங்களுடொன்றில். (௩௧)

குதிஞர்ச்சென்னிமாலொழிக்கருங்கொடுமைமேற்கொண்டு
விதியெலாம்பிறழ்ந்தமாநுமுனிவரும்வெதும்பி
நிதியமேகதியெனும்பிழையெங்கணுநிலவிப்
பதிதருங்கொடுங்கள்வருநலமிகப்படைத்து. (௩௨)

தெய்வவாலயங்களிலுறுஞ்சிறப்பெலாங்குலைந்து
சைவமாகியநன்னெறியாவையுந்தளர்ந்து
பொய்வழக்கினருளந்தொறும்புளகிதம்பொலிந்து
மெய்வழிச்செல்வார்மிடிப்பெருங்கடலிடைவீழ்ந்து. (௩௩)

இன்னணம்பகர்பாவமெல்லாம்பெருகிடலான்
முன்னமுள்ளபுண்ணியபலமியாவையுமுடிந்திட்
டின்னரும்பெருந்தவமுளானவருநலமுறுவா
னின்னலெய்துபுநிலமகளழுதனளினைந்தே. (௩௪)

அழுதவோசைகேட்டமரருமவர்பதிக்கோனு
மெழுதொணாமறைக்கிழவனுமாயனுமேகிப்
பழுதின்மாதையூர்க்கோயிலுள்வளர்பரசிவனைத்
தொழுதுபோற்றினரவனசரீரியாய்ச்சொல்வான். (௩௫)

உமக்குமாத்திரமத்துயருளதுகொலுலவா
நமக்குமோர்சிறிதுள்ளதாலின்னநாஞ்சகியே
மிமக்குன்றுண்முலைப்பாலுகர்மதலையையேவித்
தமக்கும்பன்னவத்துன்பறத்தவிர்க்குதுமென்றான். (௩௬)

அதுவினவலுமன்னவர்தம்பதியடைந்தார்
விதுவுலாஞ்சடைவேதியன்வேலனையழைத்துப்
பொதுவினன்மையிப்புவியொடுவானுறப்பொருந்து
மிதுசெய்மானிடயாக்கையொன்றெய்தியென்றிசைத்தான்.

அந்தநாளொருமானிடனருந்தவம்புரிந்து
மைந்தன்வேண்டுமென்றிரந்திருந்தனனவன்பனைநன்
செந்தகைத்திருவயிற்றொருமகவெனச்சனித்துக்
கந்தனேயெனக்காண்டொறும்பலர்சொலக்கவின்றான். (௩௮)

அவன்றனூர்ப்பெயரன்னைதந்தையர்பெயராதி
பவந்தமாயொருவாறமைத்துரைத்திடற்பயனென்
சிவன்றனுள்ளமுந்தேவர்தம்முள்ளமுஞ்சித்தர்
நவந்தருந்திருவுள்ளமுமறிதருநன்கே. (௩௯)

கல்விகேள்வியிற்சிறந்தனன்கருணைமேலீட்டாற்
செல்விகோன்முதலினர்வியப்புறும்படிதிகழ்ந்தான்
பல்விதத்தலங்களின்மகிமையும்பகுத்தறிந்து
நல்விசேடமாமாதையேயெனமிகநயந்தான். (௪0)

அங்குபோவதற்காகியவுறுதிபெற்றிடுநாட்
கங்குலிற்றுயில்கனவினிற்கடகரிமுகன்றான்
பொங்குமன்பினிற்பூசைசெய்துய்ந்தமைபுகன்றா
னெங்குமின்றியவுவகைமேற்கொண்டுசென்றேய்ந்தான். ()

சென்றுநான்செயத்தகுநலமுழுமையுஞ்செய்து
பொன்றுறுவழகேசர்தம்பூசையும்புரிந்து
மென்றுகிற்பிடியனையசீருமையொடுவெள்ளிக்
குன்றுறழ்ந்தமால்விடைமிசைகுலவுறக்கண்டான். (௪௨)

கண்டுதெண்டனிட்டளவறத்துதித்தலுங்கருணை
கொண்டுநின்விருப்பியாதெனவினவுமக்கோன்பால்
விண்டுவெங்கமலத்தனுநீயுமாவிளங்கித்
தொண்டுசெய்திறப்பொடுபிறப்பறவெனச்சொன்னான். (௪௩)

ஏதவாறுநீவிரும்பினுமவைமுழுதளித்தே
யிந்தஞாலமேனாடத்திடம்பதத்திலெய்தென்றிட்
டந்தவூரிலிங்கத்தினுட்புகுந்தனனமலன்
கந்தநாண்மலர்பொழிந்தனர்விண்ணுளார்களித்தே. (௪௪)

உடனெல்லாவுலகமுமுருக்கரும்படைத்திரளுந்
நடவுட்டன்மையுந்தன்னவாத்திகழ்தரக்கண்டு
மடலரகரொத்தாணவத்தழுந்திடாதடியார்
தடமலர்த்திரட்கடிமையாமெனுநிலைசார்ந்தான். (௪௫)

உத்தமர்க்குநல்லுதவிசெய்யாதொளித்துலவுஞ்
சித்தரும்பலதேவருமிருடியர்திரளு
நித்தம்வந்துறவாடிடப்பெற்றனனீசப்
புத்தராதியர்நடுநடுங்குபுமிகப்புலர்ந்தார். (௪௬)

வேறு.

வீரர்களும்புலவோருமாதவருமடவாரும்விரும்பிச்சூழ
த், தேரதனிற்றிசைதொறும்போய்த்தெய்வமின்றென்பாரை
முதற்றிருத்தித்தேறாக், கோரகுணங்காட்டினரைக்கொன்ற
ழித்தான்விரும்புமவர்குலவேர்கெல்லிப், பாரணங்கின்சுமை
தீர்த்துப்பகவனிவனெனப்பலர்சொல்பயன்பெற்றானே. (௪௭)

வேந்தனென்றார்பலர்புலவர்தலைவனென்றார்பலர்மலய
வெற்பின்மேவுஞ், சாந்தனென்றார்பலர்மதனன்றானென்றார்
பலரவனத்தன்மைமுற்றும், வாய்ந்தடியாரொத்தேவாவ்வணங்
கிடினுமவரவர்க்கவ்வடிவங்காட்டிப், பாந்தளணிந்தலையுலகே
பலவுலகுமாவிளங்கப்பார்த்திட்டானே. (௪அ)

அறிவில்சிலபுன்குரவரமைத்தநெறியத்தனையுமழிந்திட்
டம்பொற், பொறியிருந்தமார்பனுந்திப்பூப்பவருநான்முகத்தோ
ன்புகலுவேத, நெறியனைத்தும்விளக்கியவற்றசுரர்கலந்தனை
முழுதுநீக்கிமோமப், பறியிடைசாரணர்வருந்துமிஞ்சைமுத
லாமபலவும்பாழ்செய்தானே. (௪௯)

எச்சமயத்தோர்களையுந்தெய்வமொன்றேயெனத்தேற்றி
யிதுவதென்னும், பொச்சமொழிந்திடினுமவற்றுள்ளநன்மை
யத்தனையும்புரந்தானந்தோ, விச்சமாசானந்தமினிதினிதென்
றறிவறிந்தோரெவருஞ்சொன்னார், நச்சரவுந்தேனையுமபோன்
றிகல்வாருமுறவினராய்நனிவாழ்ந்தாரே. (௫0)

எல்லவருந்தங்குரவனியாவருக்கும்பொதுவானென்
றேசொன்னார், வல்லசிலதானவரும்பைசாசர்களுமபுலைமிமா
ஞ்சர்தாமும், புல்லறிவாண்மையிற்சிறந்தபுத்தர்முதலினோர்
தாமும்பொருந்துமாய்ந்தார், கொல்லலபுலையாடலிஞ்சைசெய
ன்மூன்றுமவரிதினிற்குலவினரோ. (௫௧)

எத்தனையோசத்துருக்களனலில்விழுபூவினம்போன்
றிறக்கக்கொன்றான், செத்தழிந்தார்பலருலகினுடலொடுமீ
ண்டிலவிடவுஞ்செய்தானந்தோ, பத்தர்விரும்பியபயன்முற்று
தவுதற்கென்றுமாதைப்பதிப்பண்டைச், சித்தரிருப்பதுதெ
ரிந்துஞ்சிலர்தமுயிருய்வதெண்ணித்திகைக்கின்றாரோ. (௫௨)

அன்னவனைக்கண்டொருமானிடர்பலருங்கருதியவாறு
னைத்துஞ்செய்யு, முன்னவனீயெனத்துதித்தாரவனெனைச்
செய்தளிக்குமொருமுதலுண்டென்று, னென்னசொல்வே
னிவ்வுலகிற்பலர் தமக்கென்றொருசெயலுமெய்தாப்போதே,
தன்னதுகற்பனையேயாஞ்சகசிவபரமெனற்குஞ்சலிக்கிலாரோ.

அவ்வண்ணமம்முநந்நகிலமிசைவிளையாடலனந்தஞ்செய்து, மைவண்ணத்திருநெடுமான்முதலியவானவர்பலர்க்கு மகிழ்ச்சிநல்கிப், பொய்வண்ணக்கலிவருந்தும்புகழ்க்கடலின் முழுக்காடிப்புனிதர்சூழச், செவ்வண்ணத்திருவுருவாய்ச்சிகியூர்ந்துசிவலோகஞ்சேர்ந்தானன்றே. (ருச)

அங்கனந்தம்பேர்தனைப்போன்றயில்வேலோடவிர்வது கண்டவரிற்சேர்ந்து, செங்கமலத்தடஞ்சூழ்ந்திருவாமாத்தூர்ப்பாமன்சிர்சொற்றுற்றான், பங்கமிலியாழ்வல்லவரிற்றலையாயநாரதனைப்பணியிற்பூசித், தெங்கணும்வாழ்வுறுமெவரும் போற்றிசைக்குநலம்பெறுசீரியம்புவேனே. (ருரு)

முற்றிற்று.

ஆக படலம்-கங-க்கு கவி ௩௱௬௰௪.

உ

சிவமயம்.

நாரதர்பூசித்தபடலம்.

எவ்வேளையுமாமுனிவோர்புடையீண்டிச்சூழ
மெய்வேதமுடிப்பொருட்குஞ்சதுர்விட்டுநீங்கான
மைவேல்புரைகண்ணியர்சூழ்கலைவாணிதன்செங்
கைவேய்ந்தவிர்வீணையினோசையிற்காதல்கூர்ந்தான். (க)

ஓரேழ்சுரமும்பிறழாவணமுன்னியன்னாள்
சீரேய்தரப்பாடல்வினையமகிழ்சிந்தைதன்னாற்
பாரேழுதலாமுலகியாவும்பராவும்வண்மைப்
பேரேய்ந்தொளிர்நாரதன்முன்வரப்பெற்றிட்டானே. (உ)

பெறுமைந்தனத்தாதைதன்பொன்னடிபேணிப்பாங்க
ருறுமன்னைதன்றாளினும்வீழ்ந்தனனோகைபூத்து

சிறுமங்கைபெற்றுங்கெழுலியாழொன்றுசிட்டித்திருந்தாள் (௩)

ஞானத்தகைநான்முகனல்கினனாவின்வாணி
கானத்திறங்காட்டினள்வேறினிககாதலுண்டேன்
மானப்புவியிற்றமிழ்த்தேயத்துமாதையூர்வாழ்
கூனற்பிறைச்சென்னியற்போற்றெனக்கூறினாரோ. (௪)

அம்மாற்றம்வினாவலுந்தாழ்ந்தெழுந்தங்குபோயப்
பெம்மான்றனைப்பன்மலரான்மிகப்பேணியேத்திக்
கைம்மான்மழுவாதியகோலங்கருத்தினாடி-
மைம்மாதுமைசொல்லுறழ்நல்லிசைவாசித்தானே. (௫)

அவ்வாறுபன்னாட்கழித்தேங்கியழுங்கனாடிச்
செவ்வானுருவம்புனையுஞ்சிவசித்தமூர்த்தி
யெவ்வானவருந்தொழவெள்விடையேறித்தோன்றி
வெவ்வாதனைதீர்ந்தநின்வேட்கைவிளம்புகென்றான். (௬)

எல்லோகமும்போய்வருமாட்சியுமீடிழீமைப்
பொல்லோர்களுங்காணுமுன்னென்பொடுபோற்றுசீருங்
கல்லோலமகோததிநேர்புகழ்க்காடுநல்கென்
றில்லோடொளிர்வானெதிர்தாழ்ந்தெழுந்தேத்தினானே. (௭)

சந்தோடமலிந்துவிண்ணோர்பலர்தாமுங்கேட்பத்
தந்தோமெனச்சொற்றனன்மாசையிற்றங்குநாதன்
றிந்தோமெனவைந்தொழிற்கூத்தினிச்செய்யுந்தோறும்
வந்தோதுதியாழிசையென்றுநல்வாய்விண்டானே. (௮)

அந்நாண்முதல்வேதமொடாகமமாதிநூல்க
ளிந்நாரதன்றன்புகழும்பெரிதேத்தலுற்ற
முந்நான்குநெறிக்குமோரேபொதுமூர்த்தியாகி
யெந்நாளுமெங்கெங்குமுலாவுவப்பெய்தினானே. (௯)

எவர்க்கும்பொதுவாநிகழ்தன்மையியைந்தவாற்று
லவர்க்கொன்றிவர்க்கொன்றுரைக்கும்பிழையற்றுஞானத்
தவர்க்கும்புலவர்க்குமன்றிக்கொடுந்தானவர்க்குந்
துவர்க்குஞ்சொலுமின்சொலுஞ்சொல்லத்துணிந்துளானே.

சைவத்தவர்தம்மவனெனபதிற்சக்கரக்கைத்
தெய்வத்தடியார்களுஞ்சொல்லுவர்செப்பன்மெய்யேற்
பொய்வர்த்தனைத்தானவர்தம்பகைபூணல்வேண்டு
மைவந்திரத்தானெனவேபொதுவாயுளானே. (கக)

கனகன்மனையாள்வயிற்றுற்றகருப்பங்கேட்ப
வனகத்திருமந்திரநாரதனன்றுசொற்றவ்
வினமுந்தவமெய்திடச்செய்தனனில்லையேல்வெம்
பனகம்புரையக்குலமுற்றிலும்பாழதாமே. (கஉ)

ஆமாதையுளார்தருமைந்தனுக்காடதாமோர்
பாமாவும்வனத்துறையுங்குறவள்ளிமின்னு
மொமாப்புறுநாரதனுற்கிடைந்திட்டவுண்மை
தாமாவுரைத்தார்பலமாதவர்நாரணிக்கே. (கங)

நிலவார்சடைநின்மலநாதனைநீடும்வீணை
வலவாரதன்பூசைசெய்தெய்தியவண்மைசொன்னும்
புலவோர்புகல்சீர்மலிமாதையிற்புக்கெந்நாளு
முலவாப்புகழோங்குமுரோமசனுய்கைசொல்வாம். (கச)

முற்றிற்று.

ஆக படலம் கச-க்கு கவி சாரு.

உ

சிவமயம்.

உரோமசர்பூசித்தபடலம்.

நாரதனுலென்பானடந்தகதையுளது
பாரதியிந்நூலிற்பகர்தற்கிசைந்தில்லா
ளாரறிவாரிந்தவுண்மையாமாதைக்கோயிலுக்குட்
சேரமலனார்தந்திருவுளமேசான்றாமே. (க)

சத்தியலோகத்திற்சதுமுகந்தோன்றானுரைக்கு
முத்திநெறிகேட்டமுனிவோர்பலர்தாமு
முத்திநலந்தேமென்றொவ்வொருவருங்கருதி
மத்தியத்தனில்லார்போய்வாதித்தழுன்றாரே. (௨)

வேதனுரைகேட்டோர்க்கும்வித்தையகங்காரத்தாற்
போதமறந்தபெரும்போராட்டமுற்றதென்றாற்
சேதமில்கடற்பார்ச்சிற்றறிஞர்தேறுவரோ
நாதனருளின்றிஞானநிலைதோன்றாதே. (௩)

அந்தக்கொடுமையறிந்தம்புயத்தோன்றன்றலையின்
சந்தச்சிகைத்தோர்தவளரோமம்பறித்துச்
சொந்தக்கருணையினாற்றாயமுனியாக்கிவிட்டான்
கந்தக்கமலன்கழல்பணிந்துநின்றானே. (௪)

நின்றானைநோக்கிநிறையுணர்வெய்தாதிகன்று
றொன்றாயமாற்றமுமந்திவளாத்தேற்றனனும்
பின்றாழ்சடிலப்பிரான்கழலைவாழ்த்தியின்
றென்றான்குநர்கமிழ்ந்துநாணுற்றானே. (௫)

நாணினர்தங்கண்முனந்தன்முனிவனுன்முகனைப்
பேணியெனக்கியாதுபணிபேசுநீயென்றேத்திடலு
நீணிலத்தின்மாதைநகர்நின்மலனைப்பூசித்துச்
சேணினர்க்குமெய்தரியசீர்பெறுகென்றனனே. (௬)

அன்றேயங்கேகியருளோர்திருவுருவா
நின்றேதந்தீர்க்குநிமலசிவலிங்க
மொன்றேதுணையென்றுரியபணிமுற்றியற்றி
நன்றேவிழைந்துநனிநாட்கழித்தானே. (௭)

மாதவஞ்செய்வார்முன்வரும்வழக்கம்போல்விடைமேற்
பூதர்களும்போற்றும்புராந்தகன்வந்துற்றிடலும்
பேதமற்றமுத்திப்பெரும்பேறருளென்று
பாதமலர்க்கீழ்ப்பணிந்தானுரோமசனே. (அ)

எந்தவரம்வேண்டுமென்றெவர்கேட்டாலுமுடன்
றந்தனமென்றோதச்சலியாதசங்கரன்றா
னிந்தமுனியளவிலேதேதோஞாயங்க
ளந்தரத்தினோருமதிசயிக்கச்சொல்வானே. (௯)

உன்னாற்பல்காதையுலகினடந்தாய
பின்னாடருவாம்பிரமனுக்குமென்றாழ்க்கு
நின்னாயுளவ்வளவுநீட்சியில்லைநீயதுமட்
டென்னாள்கைநீங்காவிரசிதமால்வெற்பிடத்தில். (௧௦)

நந்திமுதலோர்நனிவாழ்கின்றாரவரோ
டுந்தியபேரானந்தமுண்டிருந்தியுற்றக்காற்
பிந்தியதன்மேன்மைபிறங்குமெங்கும்போய்வரலாம்
பந்தியநின்போல்வார்பலருள்ளாரென்றானே. (௧௧)

செப்புமொழிகேட்டுன்றிருவுளத்திற்சீர்கேடாந்
தப்புதிக்குங்கொல்லோநின்சம்மதத்தைத்தள்ளவல்லா
ரொப்புவனத்தேனுமிருப்பாரோவென்றிறைஞ்சி
யப்புனிதமாமுனியங்கவ்வாறறைந்தானே. (௧௨)

முக்கணனம்மாற்றமொழிந்தநாளிற்றிகழ்ந்த
வக்கமலத்தோனுமருக்கனுமாய்வுற்றடுத்த
விக்கற்பந்தன்னிலெழுதுமாபாரதமு
மக்கடவுண்மாமுனிவனாற்றலெடுத்தோதியதே. (௧௩)

நாராயணன்கலையாநானிலமுய்வானுதித்த
வேரார்முனிசொல்பதினெண்புராணங்களுள்ளுந்
தாராளமாவத்தவமுனிவன்சீர்விளங்கும்
பேராதரமுடையார்பீடளத்தற்பாலதன்றே. (௧௪)

இந்நாளவன்றனக்கென்றியாக்கையொன்றெங்கெங்குமில்லை
பைந்நாகப்பூணான்பதத்தேகலந்துள்ளா
னந்நாட்கதையீண்டறையத்தகாதிந்நூ
லெந்நாவாற்பின்சொல்லிக்கைக்கேதுவிருக்கின்றதுவே

மன்னுபெருஞ்சீர்த்திருவாமாத்தூரில்வாழ்சிவனை
யுன்னுநலத்தாலுரோமசன்மனுய்கைசொற்றும்
பின்னுசடைக்கற்றைப்பிரீங்கிமுனிவன்சரிதந்
தன்னுளொருசிறிதுசாற்றத்துவக்குகின்றாம். (கசு)

முற்றிற்று.

ஆகப்படலம் கரு-க்கு கவி சாஉக.

உ

சிவமயம்.

பிரீங்கிமுனிதவப்படலம்.

இன்னகாலத்தின்னார்பெறத்தோற்றினா
னென்னநானறியேனெவராயினுஞ்
சொன்னதாகவுங்கேட்டிலன்சூழ்ச்சியிற்
பின்னமிக்கபிரீங்கிமுனிவனே. (க)

தூயவன்சிவனேயவன்றெருள்புணர்
மாயவல்லியோர்வம்பியவட்டொழே
னாயவட்கினியாரெவராயினுந்
தீயவென்னத்தினந்தினமேசுவான். (உ)

அத்திமாலையணிந்தவழகனார்
பத்தியேமுனிவோர்பெரும்பாக்கியஞ்
சத்தியைப்பணிந்தேத்துந்தகையுளார்
முத்தியெய்தலரென்றுமொழிகுவான். (ங)

அந்தமாமுனியைப்பலவன்பரு
மெந்தயோகியரும்பெரிதெள்ளியுங்
கந்தனைத்தருகண்ணுதற்கள்வர்தஞ்
சொந்தனென்னத்துணிந்தனர்போலுமே. (ச)

இப்பிரீங்கியிகழுந்தொறுந்தொறுஞ்
செப்பிலங் குமுலைச்சிவைசிந்தையுள்
வெப்பினையந்தமைமிஞ்சுபுகொண்கர்தா
மொப்பிடும்படியொன்றுரைப்பாளரோ. (௫)

இருவர்தாமுமொரோயுருவெய்தியக்
கெருவமாமுனிகண்முற்கிளர்ந்தவ
னருவருப்பதுகாணலவாவினேன்
றருகியென்றனளங்ஙனந்தாமுற்றார். (௬)

சடையைக்கூந்தலைச்சங்கினைத்தோட்டினைப்
படைகளாமழுவைக்கொடும்பாசத்தை
யடைவின்மற்றவற்றைப்பகாதன்முற்
றொடைகளிற்பலர்சொற்றமைநாடியே. (௭)

திகழ்வெண்குன்றுசெங்குன்றுருவாயது
நிகழ்பல்லோருநிரம்பமகிழ்ந்தன
ரிகழ்பொல்லாமுனியவ்வுருவின்னடு
வகழ்தலுற்றனன்வண்டுருவாகியே. (௮)

துளைத்துநாதனோர்பாதியைச்சுற்றினன்
வளைத்தவில்லுறழ்வாணுதலம்மைநெஞ்
சுளைத்தனூனுதிராதியுற்றேங்குடற்
றிளைத்துளாயிதென்சீயெனச்சீறினள். (௯)

அதனையோர்ந்தவணக்கணமேயவை
யுதறிநீத்துநிற்குந்திறமின்றியே
பதநடுங்குபுவீழ்ததிபார்த்தொர்தா
ளிதமுறயகொடுத்தானழகேசனே (௧௦)

யாவருக்குமொரோபொதுவென்றமெய்த்
தேவதேவன்சிவனெனற்கிதொர்சான்
றாவதுந்தெரியாவறிவினவெம்
பாவமன்னபகைபிறிதில்லையே. (௧௧)

தன்னில்வேறலளாமுமைதன்களிப்
புன்னிநம்பினாற்கூறுறப்பார்க்கலா
னென்னிலீசனிமைப்பிலர்க்கார்வமிட்
டன்னியத்தகுவர்க்கிடராற்றுமோ. (கஉ)

மூன்றுகாலுமல்லாதொர்கைமுன்னிடத்
தூன்றுகோலுமுதவியுமொண்பிறைக்
கூன்றலக்கினனுதலிற்கும்பிநொந்
தீன்றுளாடனையில்லவர்க்கின்னலே. (கங)

சேலெல்கண்ணுமைதீமகவாமுனி
பாலென்பன்றியபற்றிலையோபசுந்
தோலென்கூறென்றுஞ்சொற்றிலனுட்டயை
யாலென்றும்பிறரன்னையொவ்வாகளே. (கச)

கண்ணுமென்பினங்கட்டுநரம்பது
மெண்ணுஞ்சத்தியிடப்பொருளாமலால்
விண்ணுநாணும்வெறுவெளியாஞ்சிவ
நண்ணுருவெனநான்மறைகூறுமே. (கரு)

அங்கண்ஞாலத்தவர்களும்பல்வயிற்
பொங்கமாரப்பொறிக்குமபுகழ்முனி
கங்கணக்கட்செவிச்சிவன்காதலாற்
றுங்கமெயதித்துலங்கினனீடுநாள். (கசு)

வேறு.

பிங்கலக்குன்றாயசிலைப்பெருமானைப்பெரிதேத்திச்
சிங்கமிவர்ந்தவிர்சிவையைத்தினமிகழ்பிரீங்கிமுனி
செங்கனகத்தனிமன்றிற்றிருநடனஞ்செயச்சோம்பாப்
பங்கயத்தாளினிற்கலக்கும்பரகதியின்விருப்புற்றான். (கஎ)

அவ்வாஞ்சையங்கீகரித்திட்டானிடத்திலதுகேட்டா
னெவ்வாறெங்கெவர்சொலினுமிசைந்தபொதுப்பொருளானுன்
மெய்வாழ்வாமதுதருதும்விரையேயென்றுரைத்திட்டா
னிவ்வாறுநிகழ்காலத்தியன்றவியனிசைக்கின்றாம். (கஅ)

அந்திமதிச்சடைப்பெருமானடித்தொழும்புமறவாத
நந்தியவன்பதம்போற்றுநாகரிகத்திருமூலன்
சிந்தியாவவற்பரவுஞ்சித்தனடற்காலாங்கி
புந்தியாலவற்றொழுஞ்சீர்ப்போகமுனியவன்சீடர். (க௯)

கருவூரான்கொங்கணனென்கனயோகப்பெருஞ்சித்த
ரிருவரவர்தங்களுக்குளிளையவனுங்கொங்கணன்றான்
மருவார்மென்மலர்க்கூந்தல்வாலைபதந்தொழுதுய்ந்தோ
னருளான்மிக்குயர்வுற்றானவன்பெருமையளப்பிலவே. (உ0)

சிவன்முதலாமைவர்களுஞ்சித்தரினத்தினர்தாமே
யவண்மலர்த்தாணனிபோற்றியடிநாளுய்ந்தானைத்தே
றுவகையுளான்பிரீங்கிமுனியுறுதிபலர்சொலக்கேட்டுத்
தவளநெடுங்கயிலாயச்சாரலிற்சென்றவற்கண்டான். (உக)

கண்டடற்றோன்றியதாயகாலத்தாற்பழையனெனத்
தொண்டுடையார்முறைப்படியேதொழுதியாவர்பரமென்றான்
மண்டுசடைச்சிவனெனலுமலர்க்கூந்தற்சிவையென்றான்
விண்டுமுதலினர்தாமும்வியப்புறவாதிழைத்தாரே. (உஉ)

பார்ப்பதியோர்பசுவெனலும்பரமனொருபத்தனென்றான்
சீர்ப்பனைமைச்சடமெனலுஞ்சிவன்றனைச்சூனியமென்றான்
பேர்ப்பரியதவஞ்சொலலும்பிரமைகொண்டுதொழில்சொன்னா
ரோர்ப்பரித்துச்செயும்வாதத்தளவுரைத்தற்கறியேனே. (உங)

வாதபலம்பலமன்றிமதபலமின்றெனுமாற்றம்
போதவிளங்கியதுணர்ந்தபுலவோருமுனிவோரு
மாதரத்தோடிருவரையுமழைத்தேகிக்கயிலைமலை
மீதமருமிருவரெதிர்விடுத்தியன்றவிதஞ்சொன்னார். (உச)

சிவனுமுமையவடானுஞ்செப்பரியவாறுமகிழ்ந்
திவர்புகலனிசமென்றேயிசைத்திட்டாருடன்வந்தார்
கவலுமிவர்வாதொழியக்கருணைசெய்ம்மினெனத்தாழ்ந்தார்
தவர்பதியாங்குறுமுனிவன்றானொழிக்கைகடனென்றார். ()

அம்மையுமப்பனுஞ்சொலல்கேட்டாங்குற்றானைவோருஞ்
செம்மைவளம்பொலிபொதியச்சிலம்பினதுசிரத்தேகி
மும்மைவினைப்பிணிதீர்ந்தமுனிக்கோனைத்தொழுதிறைஞ்சித்
தம்மையனுப்பியவாறுசாற்றிடலுந்தமிழ்க்கோமான். (உசு)

வாதித்தாரிருவரன்றிமற்றையருங்கேட்டுணரப்
பேதித்தார்முத்திமட்டும்பெறலரிதாமொன்றென்னச்
சாதித்தார்க்கெளிதிலெய்துஞ்சத்தியஞ்சத்தியமென்னப்
போதித்தான்றுணைவந்தார்பொருகவெனத்தம்பதிபுக்கார். ( )

கொங்கணனைக்குறுமுனிவன்கூவிநின்னுட்குறிப்பெனென்றான்
சங்கரனுநீயுமிருதடங்கிரிமீதுறுமளவு
மங்கமொடுவாழ்ந்தருட்சித்தாடலென்றானக்கணமே
புங்கமிகுநீறளித்துப்போகெனநல்விடையீந்து. (உஅ)

மூக்கால்கொள்முனியையுமம்முறைப்படியேவினவுதலு
மெக்காலும்பிரியாவிட்டிரண்டறவாழ்ந்திடலென்றான்
மைக்காலன்றனையட்டார்மனைவிமனங்களிகூரு
மக்காலம்வருமளவுமமையாதென்றறைந்திட்டான். (உகூ)

நீடுநாளவட்பகைத்துநிந்தித்தபாவமுற்றும
வீடுமாறுபாயமொன்றுவிளம்புகெனப்பணிந்திடலு
நாடுவார்மனமேபோனலந்தீதென்றிரண்டினிலு
மாடுவாற்பிரித்தானுக்கலைக்கடனுண்டோனுவலுவான். (௩0)

தீங்குதவிர்பம்பையெனுந்திருநதியின்வடமேறுகி
லோங்குபுகழ்த்தனியாமாத்தூருளதவ்வூர்ச்சிவன்றன்
பாங்குடையாளொதிர்க்கோயில்படைத்தருட்கூத்தியற்றுகின்றா
ளாங்குபெருஞ்சத்தியக்கல்லாமதொன்றுமமைந்துளதால். ( )

அங்குபோய்த்தவஞ்செய்தியவளுளத்தினருளாவம்
பொங்குநாள்வருமளவும்பூருவவாசனைபகைத்தாற்
கங்குனேர்களத்தானைக்கலந்திருப்பாடனைப்பிரித்துப்
பங்குபேசிடலென்றான்பணிந்தெழுந்துவிடைகொண்டு. ( )

பகர்வயிற்சென்றனைவோரும்பார்த்திகழுமுருகீத்து
நிகரில்வன்னிமரமாகிநின்றுதவஞ்செய்கின்றா
ணிகாரத்துள்ளார்பலருமிந்நாளுங்காண்கின்றார்
சுகபரமானந்தமுத்திதோய்தருநாளறியேனே. (௩௩)

இம்முனிவனொடுநெடுநாளெதிர்வாதிட்டான்றன்னை
வெம்முனைச்சூலம்பிடிக்கவிறல்வடுகன்மொழிவழியே
பம்முறுமுத்திரநாளோர்பங்குனித்திங்களிற்பகற்போ
திமுகக்கண்ணாற்பார்த்துமினியபயனெய்திலனே. (௩௪)

ஆதலினெப்பேறெவர்தாமடைந்தாலுமாமாதை
நாதாருட்செயலூட்டுநலத்தளவேகொளற்பாற்றாம்
பேதகுணத்தாற்பலவாப்பிதற்றுவதுமுறையன்றன்
றேதமறவிட்டுயர்ச்சியிதனுணர்கிலங்குறுமே. (௩௫)

முற்றோன்றுமிருகாலின்மொய்ம்பழிகான்முக்கணனுன்
மற்றோர்காலம்பெற்றோனுமாமானவகைசொன்னாங்
கற்றோர்சூழ்மதங்கமெனுங்கடவுண்முனிவனுமவன்சொற்
பெற்றோரும்வருஞ்சபரன்பெண்ணுமுய்ந்தபடியுரைப்பாம். ()

முற்றிற்று

ஆகப்படலம் கரு-க்கு கவி சாருமை.

உ

சிவமயம்.

மதங்கமுனிமுதலோர்பூசித்தபடலம்.

வாலியநிறத்தொடுமலர்ப்பிரமனாவில்
வேலினைநிகர்த்தகண்வியன்கொடுறைவாணி
தாலியறியத்தருதமிழ்க்கவிசொல்கின்றேன்
மேலிகலன்மின்புலமைமிக்கபெரியோரே. (௧)

மன்னுதவமும்புகழுமாட்சிமையுமன்புந்
துன்னுறுமதங்கமுனிதோற்றுமிடமியாதோ
தன்னுரிமைமிக்கதொர்தலஞ்சரதமாதை
யென்னுமெழில்வன்னிவனமேயெனவிருந்தான். (௨)

வேதமொருநாலின்முன்விதித்தமதமாறு
மாதரமுறும்படிதனங்கமெனவொப்பி
வாதமுழுதோவலின்மதங்கனெனுமோர்பேர்
மாதவரெலோர்களுமகிழ்ந்துரைசெய்தாரே. (௩)

சாமசுரமாதியதனுதுதனிநாவா
னுமகளுமெச்சிடநவின்றிடுமொர்பண்பாற்
றுமதகுணந்தவிர்மதங்கனெனுநாமங்
கோமகளைநேர்புலவர்கூறினர்கண்மன்னே. (௪)

ஈனகுலர்மாதவமிழைத்திடினுமேலா
மானமுனிவோரொடுமதிக்குமொருபெட்பாற்
கானமறையிற்சொல்வழிகண்முயலுற்றிட்
டேனசைகொள்வார்களுமதங்கனெனலுண்டே. (௫)

ஊனையுமுணச்சிறிதுமொல்கலில்குணத்திற்
பூனையனையாகண்மிசைபொங்குறுசினத்தால்
வானையிடமாக்கொளுமயேசனிவரும்பே
ரானைபுனைவானருண்மதங்கனெனலாமே. (௬)

வித்தகமலிந்ததிருமாதைநகர்மேவு
மத்தவனைநன்மதுவருதுதவுபூவிற்
சுத்தவிசைவண்டினமெனத்துகளிறாயோர்
மொய்த்தலின்மதங்கனெனவேமொழிகுவாரே. (௭)

எப்பொனுநிகர்ப்பரியதென்றவடகுன்றி
னைப்பொனில்விளங்குமுயர்வாயிரமதன்மேற்
கைப்பொனில்வருக்கநிகழ்காமர்முனிவோனை
யப்பொனுலகோர்களுமதங்கனெனலாறே. (௮)

நீடல்குறுகக்குறுகணீடிடநினைத்துப்
பாடவலர்பாடிடல்கடுப்பமறைநூலக
ளூடவிர்விதித்திரள்களைச்செயுமுரத்தோன்
மாடமலிமாதையின்மதங்கமுனிவோனே. (௯)

அம்முனிவனந்நகரினுண்டபெருமானைச்
செம்முளரியாதிமலராற்றினமருச்சித்
தைம்முகமுநாடியருளாழியிடைமூழ்கி
யெம்முறைகளுந்தெரியுமீடொடுந்திகழ்ந்தான். (௧௦)

நன்னருகமாங்கிருதநாளிலொருபாதிப்
பின்னருயர்சீர்கொடுபிறங்குமுனிவோனு
மன்னவனதாளனவடைந்தருள்பொறுப்பா
னின்னலில்விரத்தியினரேழ்வரவண்வந்தார். (௧௧)

வந்தவர்கள்பக்குவமதித்தடிமைகொண்டு
மைந்தரினுமன்புமலியும்படிவளர்த்துச்
சிந்தனைசெய்துய்வகைதெரித்தவர்களுந்தன்
சந்தமருவித்திகழ்தருந்தகைமைகண்டான். (௧௨)

அக்கிருதநீங்கியதடுத்தயுகம்வந்த
திக்கினுமினித்தமொழியேழையமர்பாகன்
சக்கினெதிர்வந்துசதுமாமுகவனூரிற்
புக்கினிதுறும்படிபுகன்றனனவேலை. (௧௩)

அன்னமிவர்வானுமிவண்வந்தினிதழைத்தான்
மன்னரும்வெருக்கொள்புகழ்வாய்ந்தவிர்மதங்கன்
தன்னடிவணங்குமெழுதாபதர்களுக்குஞ்
சொன்னவையலாதசிலசொல்லியவனுற்றான். (௧௪)

வல்லபுலவோரோர்கவிவாய்பகர்வவல்லா
ரல்லர்பகர்பாடல்களனேகமுறலேபோற்
செல்லமுனிசெய்பணிகள்சிற்றுமுனிவோரா
நல்லரெழுவர்க்குமமைவாயவொவோர்நாளும். (௧௫)

விந்தமதைவென்றகரமேலவன்றுகற்சொ
லந்தமுனிவோரெழுவரன்னரிவரேழ்வர்
சந்தமுமாதைநகர்தன்னில்வளரீசன்
சொந்தரெனவேபலபற்றொண்டுசெய்திருந்தார். (க௬)

அத்தகையநாளிலுலகாளுமொருமன்னன்
சத்தசுரநான்மறைகள்சாற்றுபலதேவுந்
சுத்தபரமென்னவுணர்தூயகுணமெய்தி
முத்தர்சபரப்பெயர்மொழிந்திடநிகழ்ந்தான். (க௭)

அன்னவன்முதற்றலைவியங்கமலமங்கை
யென்னவருள்பெணவயதிராறுவளாயாயுந்
தன்னதரசைக்கொடனையற்பெறாகிலாளா
வின்னலெனுமைக்கடலிடத்தினிலமிழ்ந்தான். (க௮)

அங்கொருபிராமணனகோரசிவனன்றான்
வெங்கோலைமடங்கணிகர்வீரர்தொழும்வேந்தின்
செங்கொடைவிரும்புபுகழ்ந்தவனைநோக்கி
யிங்கொருமகற்பெறுநலேதுமொழியென்றான். (க௯)

ஆன்மகிழுமாதைநகரத்திலமரண்ணல்
கான்மலர்நினைந்துமுதுகங்கைவிழைபம்பைப்
பான்மதுரவுண்டிபலருக்குதவியங்கே
மேன்மகரோரேழ்வருளரன்னவனைவேட்டு. (௨0)

சொற்படிநடக்கினதுதோன்றுமெனவோதிப்
பற்பலநலங்கொடுபறிந்தனனமன்னன்
பொற்பணிநிறைத்தபொதியாதிகொடுபோகி
யற்பதுமலிந்தவணதாற்றியவர்முறபோய். (௨௧)

சென்னிகொடுபற்பன்முறைதெண்டனதுசெய்திட்
டுன்னியபயன்பெறுமுபாயம்விழைவுற்றான்
கன்னிகையையெங்கள்பணிகைக்கொளவிடுத்தாற்
பன்னிருமதிக்கிடைபலிக்குமதுவென்றார். (௨௨)

அப்பனுட னன்னையுமதற்கிசையவப்பெண்
செப்பரியமுற்றவபலத்தவிடைசேர்ந்தே
தப்பரியதொண்டுதலையிற்கொடுதரித்தாண்
மெய்ப்பயனமன்னனும்விதித்தபடிபெற்றான். (உ௩)

பெற்றபயனிற்பிழைவருங்கொலெனவஞ்சிப்
பற்றணுவுமின்றியபதத்தரசனுற்றான்
குற்றமின்மனைக்குமதுகூடும்வகைசெய்தா
னற்றவமகட்சபரியென்றவர்கவின்றார். (உ௪)

ஆண்மதலையேயுயர்வெனக்கொளுமொராசை
வீண்மகர்தமக்குமுறன்மேதினிவழக்காற்
றேண்மகிதலச்சுமைகொளுஞ்சுதனைமன்கொள்
கோண்மறுவெனக்கழுதுகூறிடறகாதே. (உ௫)

மன்னனொருவன்கைமணமாலிகைதரித்துக்
கன்னன்மதவேளருளகளிபடைதறன்னிற்
பொன்னனையமாதவர்புகன்றபணிசெய்தல்
சின்னதுகொலோவுணர்வர்சீரியவர்தாமே. (உ௬)

வேறு.

அன்றொருத்தியெழுவருக்குமபணிசெய்துற்றாளாலு
ம்புத்திரிபோன்றவிர்ந்தாளன்றிக், குன்றொடொக்குமுலைப்
போராங்கொருவர்மீதுங்குறித்தில்லாளவர்களுமுட்கொள்ள
வில்லைத், தனொறல்குடித்தலைமுறையாயிரமட்டாயுந்தவவ
வியாற்பருவநலந்தவிரக்காணாள், வன்றொழிலாமத்தவஞ்செய்
வரிதேயாகுமலரவன்கைபொறித்துணையால்வாய்த்ததம்மா.

தேவருமற்றுள்ளபலமுனிவர்தாமுஞ்சித்தருங்கந்தருவ
ராமுதற்செப்பவாழு,மியாவருமப்பெண்ணுருவங்காணுந்தோ
றுமிகன்மதன்கைம்மலர்ப்போராவிளைத்தாரந்தோ, மூவர்ம
னைவியரனையாளென வுள்ளன்பான் முன்னியஞ்சுவார்சிலரே
முயங்கிவாழ்தற், காவருவாரொருவருமில்லாமலந்நாளயன்வி
தித்தஞாயமென்னோவறிகிலேனே. (உ௭

